# முதல் தீர்க்கதரிசனத்தின் நான்கு தீர்ப்புகள்

**தேவ ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்**

பரிசுத்த வேதாகமத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று இதிலிருக்கும் தீர்க்கதரிசனங்களாகும். உண்மையில், வேதாகமத்தின் நான்கில் ஒரு பகுதி தீர்க்கதரிசன செய்திகளாகவே உள்ளன. இவற்றில் மொத்தம் 1817 தீர்க்கதரிசனங்கள் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இவற்றில் பல தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்ட விதமாகவே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியுள்ளன. ஏனெனில், "வரலாற்றாசிரியர்கள் கடந்த கால சரித்திரத்தை எழுதுவது போல, வேதாகமத் தீர்க்கதரிசிகள் எதிர்கால சரித்திரத்தை எவ்வித தவறும் இல்லாமல் எழுதியுள்ளனர்."[1] இதனால், "தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல் வேதாகமத்தின் தனித்துவத் திற்கும் சிறப்புக்கும் முக்கிய காரணியாக உள்ளது. ஏனெனில், நம்முடைய வேதாகமத்தைப் போல வேறு எந்த ஒரு மத நூலிலும் இவ்விதமான நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் எதுவும் இல்லை."[2] இத்தகைய தீர்க்கதரிசனங்களில் முதலாவதாக அறிவிக்கப்பட்ட செய்தி ஆதியாகமம் 3ஆம் அதிகாரம் 15ஆம் வசனத்தில் உள்ளது. எனினும், இது வேதத்திலுள்ள "முதலாவது சுவிசேஷம்" என்றும் கருதப்படுகின்றது.[3] ஏனெனில், இதுவே உலகிற்கு வரும் மீட்பரைப்பற்றி வேதாகமத்தில் இருக்கும் முதலாவது குறிப்பாகும்.[4] மேலும், இது வேதாகமத்திலுள்ள தேவனுடைய முதலாவது வாக்குத்தத்தமாகவும் உள்ளது.[5] ஏனெனில், இதில் இயேசுகிறிஸ் துவின் பிறப்பும் அவருடைய பாடுகளும், சாத்தானின் மீதான அவருடைய வெற்றியும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.[6] அதாவது, உலகின் முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறிப் பாவம் செய்த பின்னர் அவர்களுக்கான தண்டனைகள் அறிவிக்கப்படும்போது, அவர்களைப் பாவத்திலிருந்து மீட்பதற்காக உலகத்திற்கு மனிதனாக வரும் தேவனாகிய இயேசுகிறிஸ்து எப்படி பிறப்பார் என்றும், சாத்தான் அவருக்கு என்ன செய்வான் என்றும், அவர் சாத்தானை எவ்வாறு முறியடிப்பார் என்றும் இவ்வசனத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் நான்கு விஷயங்கள் முன்னறிவிக்கப்பட்டுள்ளன. இதனால், வேதாகமத்தின் முதல் தீர்க்கதரிசனத்தில் நான்கு தீர்ப்புகள் உள்ளன. இதைப்பற்றி ஆதியாகமம் 3:15இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார் (ஆதியாகமம் 3:15).

ஆதியாகமம் 3:14இல் சர்ப்பத்துடன் தேவன் பேசும் வார்த்தைகளின் தொடர்ச்சியாகவே இவ்வசனம் இருப்பதினால், சில ஆராய்ச்சியாளர்கள் ஆதியாகமம் 3:15ஐயும் சர்ப்பத்துக்கு கொடுக்கப்பட்ட தண்டனையாகவே கருதுகின்றனர்.[7] ஏனெனில், இவர்கள் சர்ப்பத்திற்குள் சாத்தான் இருப்பதைக் கருத்திற்கொள்ளாமல், அதியாகமம் 3ஆம் அதிகாரத்தில் சர்ப்பம் சாத்தானுக்கான ஒரு அடையாளமாக மாத்திரமே இருப்பதாகக் கூறுகின்றனர்.[8] ஆனால், 14ஆம் வசனத்தில் சர்ப்பத்தின் நகர்வையும், உணவையும், அது உயிரோடிருக்கும் காலத்தையும் பற்றி தேவன் கூறுவதினால்,[9] இங்கு ஒரு உண்மையான சர்ப்பமே உள்ளது. எனினும், சர்ப்பங்கள் பேசுவதில்லை என்பதினாலும், சாத்தானே ஏவாளை சோதித்ததினாலும், சர்ப்பம் அல்ல

---

[1] E.W.Lutzer, *Seven Reasons Why You Can Trust the Bible*, p. 79.

[2] J.MacDowell, *A Ready Defence*, p. 56.

[3] J.J.Davis, *Paradise to Prison: Studies in Genesis*, p. 93; G.Ch.Aalders, *Genesis Volume 1: Bible Student's Commentary*, p. 107; R.K.Hughes, *Genesis: Preaching the Word Commentary*, p. 85.

[4] W.W.Wiersbe, *Be Basic: An Old Testament Study – Genesis 1-11*, p. 67.

[5] J.Phillips, *Exploring Genesis*, p. 61.

[6] D.S.Briscoe, *Genesis: The Preacher's Commentary*, p. 55.

[7] D.E.Gowan, *Genesis 1-11: International Theological Commentary*, pp. 57-58.

[8] B.K.Waltke, *Genesis: A commentary*, p. p. 90; K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, pp. 234-235.

[9] ஆதியாகமம் 3:14இல், "அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்" என்று சர்ப்பத்திடம் கூறினார்.

சா்ப்பத்திற்குள் இருந்த சாத்தானே ஏவாளிடம் பேசியுள்ளான். அதாவது, பிசாசு பிடித்த மனிதா்கள் பிசாசுகளின் வாா்த்தைகளைப் பேசுவதைப் போலவே, சா்ப்பத்திற்குள் சென்ற சாத்தான் ஏவாளுடன் பேசினான். எனவே, “ஒரு உண்மையான சா்ப்பத்திற்குள் இருந்தே சாத்தான் ஏவாளுடன் பேசியுள்ளான்.”[10] எனினும், 14ஆம் வசனத்தில் சா்ப்பத்திடம் பேசிய தேவன், 15ஆம் வசனத்தில் சா்ப்பத்திற்குள் இருந்த சாத்தானிடம் பேசுகின்றாா். ஆனால், இதைக் கருத்திற்கொள்ளாமல், 15ஆம் வசனத்திலும் தேவன் சா்ப்பத்திடமே பேசுகின்றாா் என்று எண்ணுபவா்கள், “உனக்கும் ஸ்திரீக்கும் பகை உண்டாக்குவேன்” என்று தேவன்கூறும்போது, அவா் சா்ப்பங்களுக்கும் மனிதருக்கும் இடையில் பகையை ஏற்படுத்துகிறாா் என்றும்,[11] “நீ அவா் குதிகாலை நசுக்குவாய்” என்னும் வாக்கியம், சா்ப்பங்கள் மனிதரின் காலையே தீண்டும்” என்றும், “அவா் உன் தலையை நசுக்குவாா்” என்னும் வாக்கியம், மனிதா்கள் சா்ப்பத்தின் தலையைக் குறிவைத்து அடித்து அவற்றைக் கொல்லுவாா்கள் என்றும் இவ்வசனத்திற்கு விளக்கம் கொடுத்துள்ளனா்.[12] அதாவது, சா்ப்பத்தைக் கண்டால் மனிதா் ஏன் அதைக் கொல்ல முற்படுகின்றனா் என்பதற்கும், சா்ப்பங்கள் மனிதரைக் கண்டால் அவா்களை அவைகள் ஏன் கொத்துகின்றன என்பதற்கும் கொடுக்கப்பட்டுள்ள விளக்கமாகவே இவ்வசனம் இருப்பதாகச் இவா்கள் கருதுகின்றா்.[13] ஆனால், இவ்வசனம் தேவன் சா்ப்பத்திற்குள் இருந்த சாத்தானிடம் பேசுகின்ற வாா்த்தைகளாகவே உள்ளன.[14]

சாத்தானுக்கு கொடுக்கப்படும் தண்டனையைப்பற்றி அறிவிக்கும் தேவன், தாம் இரண்டுவிதமான பகையை ஏற்படுத்தப்போவவதாகத் தெரிவித்துள்ளாா். அதாவது, “உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்” என்று குறிப்பிட்டுள்ளாா் (ஆதி.3:15). இதில், “உனக்கும் ஸ்திரீக்கும்” என்பது சாத்தானுக்கும் ஏவாளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட பகையாக உள்ளது.[15] ஏனெனில், ஏவாள் தேவனுடைய கட்டளையை மீறிச் செயல்படுகின்ற விதத்தில் சாத்தான் அவளைச் சோதித்தபோது, அவள் சாத்தானுடன் நட்புறவுடன் பேசுகிறவளாக இருந்ததினால், சாத்தான் உண்மையிலேயே எத்தகையவன் என்பதை அறியத்தரும் விதத்தில் தேவனுடைய செயல் உள்ளது. அதாவது, “சாத்தான் ஏவாளிடம் பேசியபோது, தன்னை அவளுடைய நண்பனாகவும், தேவனை அவளுடைய எதிரியாகவும் காண்பித்ததினால், அவளுடைய உண்மையான எதிரி யாா் என்பதை அறியத்தரும் விதத்தில் தேவன் சாத்தானுக்கும் ஏவாளுக்கும் இடையில் பகையை ஏற்படுத்தியுள்ளாா்.[16] இதனால்தான், எபிரெய மொழியில் “எதிரி” என்னும் அா்த்தமுள்ள “சாத்தான்” என்னும் சொல் ஏவாளை சோதித்த பிசாசினுடைய பெயராய் உள்ளது. சாத்தான் மனிதனுடைய எதிரியாக இருப்பதினாலேயே “உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கொ்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்” என்று வேதாகமம் கூறுகிறது (1பேது.5:8). இதனால், நாம் சாத்தானுடன் எவ்வித நட்புறவும் வைத்துக்கொள்ளக்கூடாது. அவன் நட்புடன் நம்மிடம் வந்தாலும், நயவஞ்சமிக்க எதிரியாகவே எப்பொழுதும் இருப்பான்.

சாத்தானுக்கும் ஏவாளுக்கும் இடையில் மாத்திரமல்ல, சாத்தானுடைய வித்துக்கும் ஏவாளுடைய வித்துக்கும் இடையிலும் பகையை உண்டாக்குவதாகவும் தேவன் இவ்வசனத்தில் முன்னறிவித்துள்ளாா். எனினும், இத்தீா்க்கதரிசனத்தில் “சாத்தானின் வித்தாகவும்” “ஸ்திரீயின் வித்தாகவும்” குறிப்பிடப்பட்டுள்ளவா்கள் யாா் என்பதுபற்றி வேத ஆராய்ச்சியாளா்கள் மத்தியில் கருத்துமுரண்பாடுகள் உள்ளன. ஏனெனில், ஏவாளின் பிள்ளைகளே ஸ்திரீயின் வித்தாக

---

10 J.Pelikan & D.Poellot, ed., *Luther's Work: Lectures on Genesis Volume 1*, p. 151; C.F.Keil & F.Delitzsch, *Commentary on the Old Testament Volume 1*, pp. 57-58.
11 J.Appleby, *Genesis Chapters 1-11: From Eden to Ur*, p.45; R.Davidson, *Genesis 1-11: The Cambridge Bible Commentary*, p. 43; J.Calvin, *Genesis: The Geneva Series of Commentaries*, pp. 165-167.
12 J.E.Hartley, *Genesis: New International Biblical Commentary*, p. 69; J.Skinner, *A Critical and Exegetical Commentary on Genesis*, p. 80.
13 G.J.Wenham, *Genesis 1-15: Word Biblical Commentary Volume 1*, p. 80; C.Westermann, *Genesis 1-11: A Continental Commentary*, p. 259.
14 E.J.Young, *Genesis 3: A Devotional and Expository Study*, p. 102; J.P.Burke, *Studies in Genesis*, p. 41; J.J.Davis, *Paradise to Prision: Studies in Genesis*, p. 93; L.J.Wood, *Genesis: Bible Study Commentary*, p. 35.
15 J.D.Currid, *Genesis Volume 1: Evangelical Press Study Commentary*, p. 128.
16 L.J.Wood, *Genesis: Bible Study Commentary*, p. 35.

இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகச் சிலர் கருதுகின்றனர்.[17] ஆனால், சிலர் "ஸ்திரீயை" சபைக்கான அடையாளமாகவும், அவளுடைய வித்தை சபையின் விசுவாசிகளாகவும் கருதுகின்றனர்.[18] ஆனால், அடுத்த வாக்கியத்தில் இந்த வித்து "அவர்" என்று தனிப்பட்ட ரீதியாக ஒருவரைக் குறிப்பிடும் விதத்தில் இருப்பதினால்,[19] இதை ஏவாளின் வம்சத்தினராகவோ அல்லது கிறிஸ்தவ சபையின் விசுவாசிகளாகவோ கருதமுடியாது. ஏனெனில், தனிப்பட்ட ஒரு நபரே இவ்வசனத்தில் ஸ்திரீயின் வித்தாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.[20] இதனால்தான், கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பழைய ஏற்பாடு கிரேக்கத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டபோது, வித்து என்னும் சொல் ஒருமையில் ஒரு நபரைக் குறிப்பிடும் விதத்தில் குறிப்பிடப்பட்டது. எனினும், ஸ்திரீயின் வித்து யார் என்பதைத் தேவன் இவ்வசனத்தில் நேரடியாக அறிவிக்காத போதிலும், ஸ்திரீயின் வித்தாக இந்த உலகத்திற்கு வந்தவர் யார் என்பதை வேதாகம சரித்திரம் நமக்கு அறியத்தருகின்றது.[21]

உண்மையில், ஸ்திரீயின் வித்தாக இத்தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவர் இயேசு கிறிஸ்து என்பதை கலாத்தியர் 3:16 அறியத்தருகின்றது.[22] எனினும், தமிழ் வேதாகமத்தில் இவ்வசனத்தில் "வித்து" என்னும் வார்த்தைக்குப் பதிலாக "சந்ததி" என்னும் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் மூலமொழியில் வித்து என்னும் அர்த்தமுள்ள சொல்லே உள்ளது. இதனால்தான், ஆங்கில வேதாகமங்களில் வித்து என்னும் அர்த்தமுடைய seed என்னும் சொல்லே உள்ளது. எனவே, கலாத்தியர் 3:16இல், "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன" என்பதைச் சுட்டிக்காட்டும் பவுல், "சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே" என்பதை அறியத்தந்துள்ளார். அதாவது, "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்னும் வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டபோது (ஆதி.12:3), அவனுடைய வம்சத்தில் வரும் இயேசுகிறிஸ்துவினால் உலகிலுள்ள சகல ஜாதியினரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்னும் அர்த்தத்திலேயே அந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையே பவுல் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டுகின்றார்.[23] எனவே, பவுல் இவ்வசனத்தில் குறிப்பிடும் "கிறிஸ்து என்னும் சந்ததி" (அதாவது மூலமொழியின்படி வித்து) ஆதியாகமம் 3:16ல் முன்னறிவிக்கப்பட்டுள்ள "ஸ்திரீயின் வித்தாகவே" உள்ளது.[24]

இயேசுகிறிஸ்துவை ஸ்திரீயின் வித்தாகக் குறிப்பிடும் முதலாவது தீர்க்கதரிசனம் அவர் எவ்விதமாகப் பிறப்பார் என்பதை முன்னறிவிக்கின்றது. அதாவது, வழக்கமாக மனிதர் கருத்தரித்துப் பிறக்கின்ற விதமாக அவர் ஆணின் விந்தனுவின் மூலமாக அல்ல, ஆணின் விந்தனு இல்லாமலேயே அவர் ஒரு பெண்ணிடத்தில் பிறப்பார் என்பதை அறியத்தருவதற்காகவே அவர் ஸ்திரீயின் வித்தாக இத்தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார்.[25] இத்தகைய அர்த்தத்தி லேயே பவுலும் கலாத்தியர் 4:4ல் இயேசுகிறிஸ்துவை "ஸ்திரியினிடத்தில் பிறந்தவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.[26] அக்காலத்தில் பிள்ளைகள் ஆணின் வித்தாகவே கருதப்பட்டார்கள். இதனால், பிள்ளைகள் அக்காலத்தில் பெண்ணின் வித்தாக அல்ல ஆணின் வித்தாகவே

---

[17] J.McKeown, *Genesis: The Two Horizons Old Testament Commentary*, p. 36; T.Longman, *Genesis: The Story of God Bible Commentary*, p. 67; A.P.Ross, *Creation & Blessing: A Guide to the Study and Exposition of Genesis*, p. 145.
[18] J.Appleby, *Genesis Chapters 1-11: From Eden to Ur*, p.45; Calvin ?
[19] W.C.Kaiser, *Towards an Old Testament Theology*, pp. 36-37; R.A.Martin, "Earliest Messianic Interpretation of Genesis 3:15" in *Journal of Biblical Literature*. 84 (1965), pp. 425-427; J.Collins, "A Syntactical note (Genesis 3:15): Is Women's Seed Singular or Plural?" in *Tyndale Bulletin*. 48 (1997), pp. 139-148.
[20] F.A.Schaeffer, *Genesis in Space and Time*, p. 103; G.Ch.Aalders, *Genesis Volume 1: Bible Student's Commentary*, p. 107.
[21] J.H.Sailhamer, *Genesis: The Expositor's Bible Commentary Volume 2*, p. 56.
[22] K.A.Mathews, *Genesis 1-11: The New American Commentary*, p. 248.
[23] Gardiner, "Note on Galatians 3:16" in *Bibliotheca*. 36 (1879), pp. 23-27; F.F.Bruce, *Galatians: The New International Greek Testament Commentary*, p. 172.
[24] W.W.Wiersbe, *Be Free: An Exposition of Galatians*, 76; R.K.Hughes, *Genesis: Preaching the Word Commentary*, p. 86.
[25] H.M.Morris, *The Genesis Record: A Scientific & Devotional Commentary*, p. 122.
[26] A.W.Pink, *Gleanings in Genesis*, p. 43.

குறிப்பிடப்படுவார்கள்.[27] ஆனால், இயேசுகிறிஸ்து ஆணின் விந்தனு இல்லாத நிலையில் அற்புதமான விதத்தில் கன்னிப் பெண்ணாய் இருந்த மரியாளின் வயிற்றில் கருத்தரித்துப் பிறந்ததினால் (லூக்.1:35) அவர் ஆணின் வித்தாக அல்ல, பெண்ணின் வித்தாக ஆதியாகமம் 3:15ல் முன்னறிவிக்கப்பட்டுள்ளார்.[28] இதனால்தான், இதை நேரடியாக அறியத்தரும் விதத்தில் பிற்காலத்தில் ஏசாயா என்னும் தீர்க்கதரிசியின் மூலமாகத் தேவன், "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசா.7:14) என்று அறிவித்தார். இத்தீர்க்கதரிசனம் 700 வருஷங்களுக்குப் பின்னர் கன்னிப் பெண்ணாய் இருந்த மரியாளிடத்தில் இயேசுகிறிஸ்து பிறந்தபோது நிறைவேறியதை மத்தேயுவின் சுவிசேஷம் அறியத்தருகிறது (மத்.1:22-23). இதனால்தான், மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்ட மணப்பெண்ணாய் இருந்தபோதிலும், அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கும் முன்பே, மரியாள் கர்ப்பவதியாய் இருந்தாள் என்பதையும் (மத்.1:18),[29] இயேசுகிறிஸ்து பிறக்கும்வரை யோசேப்பு மரியாளுடன் பாலுறவில் ஈடுபடவில்லை என்பதையும் (மத்.1:25)[30] மத்தேயு சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, ஆதியாகமம் 3:15 முன்னறிவித்தவிதமாக, இயேசு கிறிஸ்து ஸ்திரீயின் வித்தாக, கன்னிப் பெண்ணான மரியாளின் மூலம் இவ்வுலகத்திற்கு வந்துள்ளார்.

ஸ்திரீயின் வித்தாக இவ்வுலகத்திற்கு வரும் இயேசுகிறிஸ்து, "சாத்தானின் தலையை நசுக்குவார்" என்றும், "சாத்தான் அவருடைய குதிகாலை நசுக்குவான்" என்றும் தேவன் ஆதியாகமம் 3:15ல் முன்னறிவித்துள்ளார். தேவன் சாத்தானுடன் பேசியதினால், "அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிகாலை நசுக்குவாய் என்று" இவ்வாக்கியம் உள்ளது. இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்த நாள் முதல், சாத்தான் அவரை அழிப்பதற்கு தன்னால் எதையெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் செய்துவந்தான்.[31] இதானால்தான், இயேசுகிறிஸ்து பிறந்த காலத்தில் அவரைக் கொல்லும் நோக்கத்துடன் சாத்தான் அக்காலத்தில் யூதேயாவின் அரசனாக இருந்த ஏரோதுவைத் தூண்டிவிட்டான். அவனும் யூதருக்கு ராஜாவாகப் பிறந்துள்ள இயேசுகிறிஸ்துவை அழிப்பதற்காக, அவர் பிறந்த ஊரான பெத்லகேமில் இருந்த இரண்டு வயதுக்கு உட்பட்ட சகல ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான் (மத்.2:12-16). அதன் பின்னர், இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கும்போது, அவரைக் கொல்லும் நோக்கத்துடன் தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து அவரைக் கீழே குதிக்கும்படி கூறினான் (மத்.4:5-6). மேலும், இயேசுகிறிஸ்து தாம் வளர்ந்த ஊரான நாசரேத் ஜெபாலயத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, அங்கிருந்தவர்களை சாத்தான் தூண்டிவிட்டதினால், அவர்கள் "அவரை ஊருக்குப் புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டு போனார்கள் (லூக்.4:28-29). மேலும், இயேசுகிறிஸ்து தமது சீடர்களோடு கலிலேயாக் கடலில் ஒரு படகில் சென்றபோது, அப்படகைக் கவிழ்த்து அவரைக் கொல்லும் நோக்கத்துடன் சாத்தான் கடலில் கொந்தளிப்பை ஏற்படுத்தினான். அது சாத்தானால் ஏற்படுத்தப்பட்ட கொந்தளிப்பாய் இருந்ததினாலேயே, இயேசுகிறிஸ்து மனிதரைப் பிசாசுகளின் பிடியிலிருந்து விடுவிக்கும்போது அவற்றை எந்த வார்த்தைகளை உபயோகித்து அதட்டினாரோ, அதே வார்த்தைகளை உபயோகித்துக் காற்றையும் கடலையும் அதட்டி அமைதிப்படுத்தினார் (மாற்.4:39).[32] இதைப் போன்ற பல சம்பவங்கள் இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் நடைபெற்றன.

---

[27] D.S.Briscoe, *Genesis: The Preacher's Commentary*, p. A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, p. 103.

[28] F.A.Schaeffer, *Genesis in Space and Time*, pp. 103-104; F.F.Bruce, ed., *New International Bible Commentary*, p. 118.

[29] மத்தேயு 1:18ல், "இயேசுகிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[30] யூதர்களுடைய மொழிவழக்கில் "அறிதல்" என்னும் சொல் பாலுறவுக்கான இன்சொல்லணியாக உபயோகிக்கப்பட்டது. இதனால்தான் ஆதியாகமம் 4:1ல் "ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான். அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மத்தேயு 1:25ல், "அவன் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்" என்றும் வசனத்தில் "அறியாதிருந்து" என்னும் சொல் "பாலுறவில் ஈடுபடாதிருந்து" என்னும் அர்த்தமுடையது.

[31] D.G.Barnhouse, *The Invisible War*, pp. 107-108.

[32] J.R.Edwards, *Mark: The Pillar New Testament Commentary*, pp. 149-151; M.Healy, *Mark: Catholic Commentary on Sacred Scripture*, p. 96; J.A.Brooks, *Mark: The New American Commentary*, p. 87.

கடைசியாக இயேசுகிறிஸ்து தம்மையே பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தபோது, யூத மதத் தலைவர்களையும் ரோம அரசியல் அதிகாரிகளையும் சாத்தான் தூண்டி விட்டு, அவரைக் கொலை செய்தான். சாத்தான் "மரணத்துக்கு அதிகாரியாக இருப்பதினால்" (எபி.2:14) இயேசுகிறிஸ்துவின் மரணம் அவனால் அவருக்கு ஏற்படுத்தப்பட்டதொன்றாக உள்ளது. எனினும் இது தேவனால் அனுமதிக்கப்பட்ட காரியமாகவே உள்ளது. இதைப்பற்றியே ஆதியாகமம் 3:15ல் "நீ அவர் குதிகாலை நசுக்குவாய்" என்று சாத்தானுக்கு சொல்லப்பட்டது.[33] உண்மையில், இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் சாத்தான் அவருடைய குதிகாலை நசுக்கும் செயலாகவே இருந்தது. ஏனெனில் சாத்தானால் அவரை முழுமையாக அழிக்கமுடியவில்லை. இதனால்தான், அவர் மரணத்தையே ஜெயித்தவராக மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.

ஆதியாகமம் 3:15ன் தீர்க்கதரிசனம், இயேசுகிறிஸ்து ஸ்திரீயின் வித்தாக பிறப்பார் என்பதை மட்டுமல்ல, "அவர் சாத்தானின் தலையை நசுக்குவார்" என்பதையும் "சாத்தானின் வித்துக்கும் ஸ்திரீயின் வித்துக்கும் ஏற்படுத்தப்படும் பகையையும்" உள்ளடக்கியுள்ளது. எனினும், சாத்தானின் வித்தைச் சில ஆராய்ச்சியாளர்கள் பிசாசுகளாகவும், ஏனையவர்கள் அதை அவிசுவாசிகளாகவும் கருதுகின்றனர்.[34] ஆனால், ஸ்திரீயின் வித்து ஒருமையில் இருப்பதைப் போலவே, சாத்தானின் வித்தும் இவ்வசனத்தில் ஒருமையில் இருப்பதினால், இதுவும் தனிப்பட்ட ஒரு நபரையே குறிக்கின்றது. உண்மையில், உலகின் இறுதி காலத்தில் சாத்தானால் கொண்டுவரப்படும் உலக ஆட்சியாளனான அந்திகிறிஸ்துவே சாத்தானின் வித்தாக இருக்கின்றான்.[35] மேலும், இயேசுகிறிஸ்துவின் வருகையில் உலகிலிருந்து சபை எடுத்துக்கொள் ளப்பட்ட பின்னர் உலகத்தை ஏழு வருஷங்களுக்கு ஆளுகை செய்யும் அந்திகிறிஸ்து,[36] அவருடைய பகிரங்க வருகையின்போது உயிரோடே நரகத்தில் தள்ளப்படுவான் என்பதை வெளிப்படுத்தல் 19:20 அறியத்தருகின்றது.[37] மேலும், தற்பொழுது சுயாதீனமாக சுற்றித் திரிகிறவனாக இருக்கும் சாத்தானும் ஒருநாள் முழுமையாக அழிக்கப்படுவான். இதனால்தான், இதை அறிந்திருந்த அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 16:20ல், "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார்" என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில், ஆதியாகமம் 3:15ன் தீர்க்கதரிசனத்தை அடிப்படையாகக்கொண்டே பவுல் இவ்வாறு எழுதியுள்ளார்.[38] எனினும், சாத்தானின் அழிவு அவன் நரகத்திற்குத் தள்ளப்படுவதாய் இருக்கும் என்பதை வெளிப்படுத்தல் 20:10 அறியத்தருகிறது.[39] அதாவது, ஸ்திரீயின் வித்தாக உலகத்திற்கு வந்த இயேசுகிறிஸ்து, மறுபடியும் இவ்வுலகத்திற்கு வரும்போது, சாத்தானையும் அவனுடைய வித்தாக எதிர்காலத்தில் வரும் அந்திகிறிஸ்துவையும் நரகத்தில் தள்ளுவார். எனவே, வேதாகமத்தின் முதலாவது தீர்க்கதரிசனம், இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையை மாத்திரமல்ல, அவருடைய இரண்டாவது வருகையையும் முன்னறிவிக்கும் முக்கியமானதொரு தீர்க்கதரிசனமாக, நான்கு விஷயங்களை உள்ளடக்கியுள்ளது.[40]

---

[33] F.A.Schaeffer, *Genesis in Space and Time*, pp. 104-105; A.W.Pink, Gleanings in Genesis, p. 43; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 36.

[34] T.Longman, *Genesis: The Story of God Bible Commentary*, p. 67; A.P.Ross, *Creation & Blessing: A Guide to the Study and Exposition of Genesis*, p. 145; B.K.Waltke, *Genesis: A Commentary*, p. 93.

[35] H.M.Morris, *The Genesis Record: A Scientific and Devotional Commentary*, p. 212; A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, p. 103.

[36] அந்திகிறிஸ்துவையும் அவனுடைய ஆட்சியைப்பற்றியும் முழுமையாக அறிந்துகொள்வதற்கு எனது "இயேசுகிறிஸ்துவின் இரண்டாவது வருகை" என்னும் நூலைப் பார்க்கவும்.

[37] வெளிப்படுத்தல் 19:20இல், "அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது. மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[38] D.S.Briscoe, *Genesis: The Preacher's Commentary*, p. 55; J.W.Ferguson, *Genesis: Ritchie Old Testament Commentary*, p. 45; K.A.Mathews, *Genesis: The New American Commentary*, p. 247.

[39] வெளிப்படுத்தல் 20:10இல், "மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[40] A.G.Fruchtenbaum, *Genesis: Ariel's Bible Commentary*, p. 103.